தேனீடு



சபா ரவீந்திரன்

மக்கள் அறிந்தும், தெரிந்தும் வைத்திருக்க வேண்டிய சட்ட விடயங்கள் சிலவற்றை சட்டத் தமிழில் அல்லாது சாதாரண தமிழில் வெளிக்கொணர வேண்டுமென கண்ட நீண்டநாட் கனவுதான் – உங்கள் கைகளில் இன்று தவழும்

24 OCT 2000

" சீதன வீடு "

(தேசவழமைச் சட்டத்தில் ஆதனங்களின் சொந்தம் பற்றிய ஆய்வு)

இதனால் கிடைக்கும் இலாபம் முழுவதும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, வளமூட்ட உங்கள் ஆதரவு என்றும் தேவை.

தும்பளை,
பருத்தித்துறை.
2000.06.05

சபா ரவீந்திரன்
சட்டத்தரணி.

1398(e)CC

நூலுக்கு ஒரு அறிமுகம்

சட்டத்தரணி சபா.ரவீந்திரன் அவர்களின் "சீதனவீடு" என்ற சட்ட ஆய்வு நூல் காலத்தின் தேவை கருதி மலரும் மல்லிகையாகும்.

எமது சங்கத்தின் துடிப்பு மிக்க அங்கத்தவரான இவர், சட்டத்துறை வட்டாரத்தில் பலரிடமும் ஆலோசனை பெற்று "சீதனவீட்டை" உருவாக்கியுள் ளார். இந்நூல் இன்னமும் விரிவாக எழுதப்பட்டிருப்பின் அதிக பயன் கிடைத்திருக்கும்.

தேசவழமைச் சட்டத்தில் சொத்துக்கள் சென்ற டையும் முறையை இலகு தமிழ் நடையில் யாவரும் புரியும் வண்ணம் தெளிவு படுத்தியுள்ளார்.

ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய சட்ட நூல் என்ற தகுதியை இது பெற்றுள்ளது. சிறிய நூல் ஆனாலும் அதிக பயன் கொண்டது.

இந்நூலுக்கு பொதுமக்கள் கொடுக்கும் வரவேற்பு நூலாசிரியருக்கு உற்சாகத்தைக் கொடுத்து அவரிட மிருந்து மேலும் பல நூல்கள் வெளிவர உறுதுணை யாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பொ.குமாரசாமி, J.P.U.M
செயலாளர்
சட்டத்தரணிகள் சங்கம்,
பருத்தித்துறை.

சட்ட அறிவு

சட்டக்கல்வி மிகப் பரந்து விரிந்தது. மனித சமுதாயம் வளர வளரச் சட்டமும் வளர்ந்து கொண்டேயிருக்கும். சட்டக்கல்வியை முழுமையாக எவரும் நிறைவு செய்ய முடியாவிட்டாலும் அன்றாட வாழ்வுக்குத் தேவையான சட்ட அறிவையாவது சாதாரண பாமரரும் பரிந்து வைத்திருப்பது இன்றைய தேவையாக உள்ளது. சில விடயங்களிலாவது குறைந்த பட்ச சட்ட அறிவு பெற்றிருப்பது முழு மனிதத் தன்மைக்கு வரப்பிரசாதமாகும்.

எமது நாட்டின் சட்டங்கள் அனைத்தையும் எல்லோரும் கற்றிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. ஆனாலும் நம்மை ஆளுகின்ற நமது தனிப்பட்ட விடயங்கள் தொடர்பான அதாவது சொத்துக்கள் தொடர்பிலான விடயங்களில் நாம் அதிக விழிப்புணர்ச்சி உடையவர்களாக இருத்தல் வேண்டும். இல்லையேல் நாம் விரைவில் ஏமாற்றத்துக்கு ஆளாகி விடுவோம்.

நாட்டின் பொதுச்சட்டம் தொடர்பில் மக்கள் ஓரளவு தெளிவு பெற்றுள்ளார்கள். என்றாலும் தமிழ் மக்களுக்கே உரிய சிறப்புச் சட்டமான தேச வழமைச் சட்டம் பற்றி இன்று நம்மில் பலருக்கு எதுவுமே தெரியாது. எனவே வளரும் தமிழ் சமுதாயத்துக்கு வழிகாட்ட எடுக்கப்பட்ட முதல் முயற்சியே இதுவாகும்.

தேச வழமைச் சட்டம்.

இலங்கையில் பல சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. சில சட்டங்கள் வழக்கொழிந்து விட்டன. உதாரணமாக முக்குவர் சட்டம், இன்று வழக்கத்தில் இல்லை. தற்போது பொதுச்சட்டமே நாடு முழுவதற்கும் வலுவுடையதாக இருக்கின்றது. இதனுடன் தேசவழமைச்சட்டம் , கண்டியர் சட்டம், முஸ்லீம் சட்டம் ஆகியவையும் நடைமுறையில் இருந்து வருகின்றன.

முஸ்லீம் சட்டமானது : முஸ்லீம் மக்களுடைய திருமணங்கள், விவாகரத்து தொடர்பில் மட்டுமே இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கண்டியர் சட்டமும் கண்டிச் சிங்களவருடைய திருமணம், திருமண விளைவுகள் தொடர்பி லேயே இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் தேசவழமைச் சட்டமானது ஆதனங்கள் தொடர்பிலும், ஆட்கள் தொடர்பிலும் இன்றும் பயன்படுத்தப்பட்டு வரும் வலிமை மிக்க ஒரு சட்டமாக உள்ளது.

தேசவழமைச்சட்டந்தான் இந்த நாட்டிலே தமிழ் மக்களை அடையாளப் படுத்திக்காட்டும் ஒரு சட்டமாக இருப்பதுடன் தமிழ் மக்கள் இந்த நாட்டில் சட்டப்படியான உரிமை மிக்கவர்கள் என்பதற்கு சரியான ஆதாரமாகவும் அமைந்துள்ளது. தமிழ்த்தேசிய இனத்தின் வரலாறு தேச வழமைச் சட்டத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

எனவே தேச வழமைச் சட்டத்தில் ஒரு சில பாதகமான அம்சங்கள் இருப்பினும் கூட தேச வழமைச்சட்டம் தமிழ் மக்களின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும், இனத் தன்மையையும் முத்திரையிட்டு காட்டுகின்ற சட்டம் என்ற காரணத்தினால் தேசவழமைச் சட்டம் தமிழ் மக்களின் முக்கிய அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

தேச வழமைச் சட்டத்தின் ஏற்புடமை

தேசவழமைச் சட்டமானது இலங்கையிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் ஏற்புடையதா? என்பது தொடர்பில் பலருக்கும் சந்தேகம் உள்ளது. இது தொடர்பில் காலத்துக்காலம் தேசவழமைச்சட்டம் வரைவிலக்கணப் படுத்தப்பட்ட போதும் தற்போது நிலையான கருத்து எடுக்கப் பட்டுள்ளது.

தேசவழமைச் சட்டம் இரு பகுதிகளைக் கொண்டது. ஒன்று அது "ஆள் சார்" சட்டமாகும். மற்றது அது "இடஞ்சார்" சட்டமாகும். ஆள்சார் சட்டம் என்னும் போது "யாழ்ப்பாண வாசி"

என்ற பதத்துக்குள் உட்படுத்தப்படும். தற்போதைய யாழ்ப்பாண மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம் வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஏதாவது ஒன்றில் அதாவது வடமாகாணத்தில் நிரந்தர வதிவிட உரிமையையும், வதிவிட எண்ணத்தையும் கொண்ட தமிழர் ஒருவர் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்பட தகுதியுடையவர் ஆவார். யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாகத் தங்கி வாழும் தமிழர்களுக்கோ , வடமாகாணத்தைச் சேராத தமிழர்களுக்கோ, இந்திய வம்சாவழி தமிழர்களுக்கோ, தமிழ் மொழியைப் பேசும் ஏனைய இனத்தவர்களுக்கோ தேசவழமைச் சட்டம் ஆள்சார் விடயத்தில் ஏற்புடையதாகாது.

அடுத்து தேசவழமைச் சட்டமானது "இடஞ்சார்" சட்டம் என்கின்ற கருத்தில் முன்னர் குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களி லுள்ள அசையா ஆதனங்கள் அது எவருக்குச் சொந்தமாக இருப்பினும் தேச வழமைச் சட்டத்தாலேயே ஆளப்படும். எனவே இலங்கையின் வடமாகாணத்திலுள்ள காணி ஒன்று அது தமிழருக்கு சொந்தமாக இருப்பினும் சரி, முஸ்லீமுக்குச் சொந்தமாக இருப்பினும் சரி, சிங்களவருக்குச் சொந்தமாக இருப்பினும் சரி தேசவழமைச் சட்டத்தாலேயே நிர்வகிக்கப்படும். இத்தகைய சிறப்புரிமை இலங்கையில் வேறு எந்தச் சட்டத் துக்கும் கிடையாது.

ஆரம்பத்தில் தேசவழமைச் சட்டம் தமிழ் மக்களின் வாழ்வின் முழு விடயங்களிலும் ஆதிக்கம் செலுத்திய போதும் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றமடைந்து இன்று ஆதனங்கள் தொடர்பான விடயங்களில் மட்டுமே தேச வழமைச்சட்டம் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. எழுதாச் சட்டமான தேசவழமைச் சட்டம் வலிமை மிக்கதொரு சட்டமாகவே இன்றும் உள்ளது.

தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படும் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் சொத்துக்கள் தொடர்பில் தெளிவின்றி இருப்பதால் பல குழப்பங்களைச் சந்தித்து வருகின்றார்கள். குறிப்பாக காணி, கட்டிடங்கள், வீடு , தோட்டங்கள் என்பன தொடர்பான உரிமைப் பிரச்சினைகள், பங்குப் பிரச்சினைகள் எம்மை நாளாந்தம் ஆட்டிப் படைக்கின்றன.

அசையாச் சொத்துக்கள் என்று வரைவிலக்கணப்படுத்தப் படுகின்ற காணி, தோட்டம், வயல், வீடு மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உறுதி எழுதப்படுகின்றபோது யார், யார் கையொப்பங்கள் இடுதல் வேண்டும் என்பதிலும் இன்றுவரை தெளிவின்மை காணப்படுகின்றது. இத்தெளிவின்மையே தேவை யற்ற சச்சரவுகள் ஏற்படவும், நீதிமன்றங்களுக்கு அலைந்து திரியவும் தூண்டுகோலாக உள்ளது.

தேடிய தேட்டம்

திருமணத்தின் பின்னர், திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனோ அல்லது மனைவியோ ஒரு அசையா ஆதனத்தை விலை கொடுத்து வாங்கினால் அது இருவரில் ஒருவர் பெயரில் வாங்கியிருந்தாலுங்கூட வாங்கிய அன்றே அது "தேடிய தேட்டமாக" கணவனுக்கும் மனைவிக்கும் சமபங்காக அதாவது தலா அரைவாசி சொந்தமாகிவிடும். இவ்வாறு அரைவாசி கணவனுக்கும் அரைவாசி மனைவிக்கும் சொந்தமாகி விட்டாலும் மனைவி தனக்குரிய அரைவாசிப் பங்கை தானே தனிய கைமாற்றஞ் செய்யமுடியாது. கணவனுடன் சேர்ந்தே மனைவி உறுதி எதனையும் எழுதுதல் வேண்டும். ஆனால் கணவன் தனது பங்கை தன் எண்ணப்படி கைமாற்றம் செய்யலாம்.

கணவனோ அல்லது மனைவியோ இறந்துவிட்டால் இறந்தவருக்குரிய பங்கு (அதாவது அரைவாசிப் பங்கு) பின்வருமாறு போய்ச்சேரும். இறந்தவருக்குரிய பங்கில் ஒரு அரைப்பங்கு (அதாவது முழு ஆதனத்தில் நாலிலொரு பங்கு) உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணைக்குச் சொந்தமாகும். மற்றைய அரைப்பங்கு (அதாவது முழு ஆதனத்தில் நாலிலொரு பங்கு) இறந்தவரின் பிள்ளைகளுக்கு சமபங்கு விகிதமாகச் சொந்தமாகும். பிள்ளைகள் இல்லாவிட்டால் இறந்தவரின் பெற்றோர் / சகோதரங்களுக்கு உரிமை வழியாகச் சென்ற டையும். எனவே உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு இவ்வாறாக (தனது பங்கும் சேர்ந்து) முழு ஆதனத்தில் நாலில் மூன்று (3/4) பங்கு சொந்தமாகிவிடும். பிள்ளைகளுக்கு முழு

ஆதனத்தில் நாலில் ஒரு (1/4) பங்கு சொந்தமாகும். இதுவே தேசவழமைச் சட்டத்தில் தேடிய தேட்டம் என்ற பகுதியில் தேட்டப் பங்கு பிரிவடையும் முறையாகும்.

தேடிய தேட்டம் பிள்ளைகளைச் சென்றடையும்போது அது "முதுசொம்" என்ற பெயரைப் பெறும். ஏற்கனவே சீதனம் வாங்கி திருமணமான பெண் பிள்ளைகளுக்கு இந்த வகையில் "முதுசொம்" பெற அருகதை இல்லை. எல்லா ஆண் பிள்ளைகளும் மற்றும் சீதனம் பெறாத பெண் பிள்ளைகளும் "முதுசொம்" பெற தகுதியுடையவர்களாவர். இவர்களுக்கு முழு ஆதனத்தில் நாலிலொரு பங்கு மட்டுமே முதுசொமாக வந்து சேரும். முதுசொப்பங்குக்கு உரித்துடைய பிள்ளை ஒன்று இறந்திருந்தால், அதன் வாரிசுகளுக்கே சென்றடையும். அவ்வாறு வாரிசு இல்லாவிட்டால் இறந்தவருக்குரிய முதுசொப் பங்கு சகோதரங்களை அடையும்.

தேடிய தேட்டச் சொத்தையுடைய கணவன், மனைவி இருவரும் இறந்துவிட்டால் தேடிய தேட்டம் முழுவதும் அவர்களின் பிள்ளைகளுக்கு சமபங்கு விகிதமாக "முதுசொமாகச்" சென்றடையும். பிள்ளைகள் இல்லாமல் இறப்பின் முதலில் இறந்தவரின் உரித்தாளர்களுக்கு நாலிலொரு பங்கும் பின்னர் இறந்தவரின் உரித்தாளர்களுக்கு நாலில் மூன்று பங்கும் உரிமை வழியாகச் சென்றடையும்.

உதாரணமாக தேடிய தேட்டச்சொத்துடைய "பாலசிங்கம் - பரமேஸ்வரி" என்ற தம்பதிகளுக்கு பிள்ளைகள் எவருமில்லை. இவர்களில் பாலசிங்கம் முதலில் இறந்து விடுகின்றார். எனவே பரமேஸ்வரி தன்னுடைய அரைப்பங்கும், தனது கணவனுடைய அரைப்பங்கில் ஒரு அரைப்பங்கான கால்ப்பங்கும் ஒன்று சேர முக்கால் பங்குக்கு சொந்தக்காரியாவாள். பாலசிங்கத்தின் அரைப்பங்கில் மீதி அரைப்பங்கான கால்ப்பங்கு பாலசிங்கத்தின் மரணத்தின் பின்னர் அவரது உரித்தாளர்களுக்கு உரிமை வழியாகச் சென்றடையும். இதன் பின்னர் பரமேஸ்வரி இறப்பின், பரமேஸ்வரியின் முக்கால்ப் பங்கும், பரமேஸ்வரியின் உரித்தாளர் களுக்கு உரிமை வழியாகச் சென்றடையும்.

தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட திருமணமான பெண் ஒருத்தி அசையா ஆதனந் தொடர்பான எந்த உறுதியையும் தனது கணவனுடன் சேர்ந்தே (கணவரின் சம்மதத்துடனேயே) எழுத வேண்டும் என்பது கட்டாயமான விதியாகும். அது அவளுடைய தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் சரி, தேடிய தேட்டப் பங்கு அல்லது சீதனம், தன்கொடை எப்படியாக இருந்தாலும் இது பொருத்தமாகும். இவ்வாறு கணவரின் சம்மதமின்றி மனைவியால் எழுதப்படும் உறுதி ஒரு வெற்றும் வெறிதுமான உறுதியாகிவிடும்.

ஆனாலும் 1911ம் ஆண்டின் 1ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8ம் பிரிவு மனைவியானவள் அவளது கணவரின் சம்மதமின்றி அவளது அசையா ஆதனத்தை கைமாற்றலாமென்று கூறுகின்றது. எனினும் அவள் பின்வரும் காரணங்களைக் காட்டி மாவட்ட நீதி மன்றத்தின் அனுமதியைப் பெற்ற பின்னரே கைமாற்றம் செய்ய முடியும்:-

அ) அவள் கணவனால் கைவிடப்பட்டிருப்பின்

ஆ) பரஸ்பர இணக்கத்தின் பேரில் அவள் கணவனை விட்டுப்பிரிந்து வாழ்ந்துவரின்.

இ) நீதிமன்றின் ஏதுமொரு கட்டளையால் இரு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குக் கணவன் சிறையிலிருப்பின்.

ஈ) கணவன் ஒரு பைத்தியக்காரனாக அல்லது முட்டாளாக அல்லது அவன் எங்கு வாழ்ந்து வருகின்றான் என்று தெரியாவிடத்து

உ) கணவன் நியாயமற்ற முறையில் சம்மதம் தரமறுத் திருப்பின்.

ஊ) மனைவியினதும், பிள்ளைகளினதும் நலனுக்காகக் கணவனின் சம்மதம் தேவையில்லை என்று தெரியுமிடத்து

மேற்படி காரணங்களில் ஏதாவது ஒன்றை நீதிமன்றில் நிரூபித்து மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன் மட்டுமே மனைவியானவள் தனது தனிப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் கணவனின் பங்களிப்பின்றி உறுதி ஒன்றை எழுதலாம்.

பொன்னுப்பிள்ளை எதிர் குமாரவேற்பிள்ளை (65 N.L.R பக்கம் 241) என்ற வழக்கில் யாழ்ப்பாணத்திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் 8ம் பிரிவு பெண் ஒருத்தி அவளது கணவனின் சம்மதத்தைப் பெறாமல் அவளது அசைவற்ற ஆதனங்கள் முழுவதையும் விரும்புமாற் போலக் கைமாற்றஞ் செய்வதற்கான பொது அனுமதியைத் திருமணப் பெண் ஒருத்திக்கு வழங்குவதற்கான நியாயாதிக் கத்தை மாவட்ட நீதிமன்றத்திற்கு வழங்கவில்லையென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தப் பிரிவின் கீழ் நீதிமன்ற மானது அனுமதி வழங்கும் நேரத்தில் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ள குறித்த உறுதி மாற்றத்துக்கு மட்டுமே அனுமதி கொடுக்கலாம்.

கணவன் - மனைவி இருவரும் சட்டப்படி விவாகரத்தைப் பெற்றிருப்பின், அந்தப் பெண் தனக்குரிய அசையா ஆதனங்கள் தொடர்பில் உறுதி எழுதுவதற்கு மாவட்ட நீதிமன்றின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியமில்லை. அதே போல மனைவி தனது அசைவுள்ள ஆதனங்களைக் கணவரின் சம்மதமின்றியே வேறொருவருக்குக் கையளிக்கத் தடையேது மில்லை.

கணவனை இழந்த விதவைப் பெண்ணும், திருமணமாகாத பராயமடைந்த கன்னிப் பெண்ணும் எவரின் சம்மதமுமின்றி சுயமாக தனியே உறுதி எழுதிக்கொள்ளலாம்.

சீதன ஆதனங்கள்.

அடுத்து சீதன ஆதனந் தொடர்பில் ஆராய்ந்தால் சீதன ஆதனம் யாருக்குச் சொந்தமானது என்பது இன்று வரை பலருக்கு மயக்கமுடையதாகவே இருகின்றது. இது விடயத்தில் அதி உயர் கல்வி பெற்றவர்கள், பெரும் பதவியில் இருப்பவர்கள் கூட சரியான தெளிவின்றியே உள்ளார்கள்.

சீதன உறுதியில் எவ்வாறு எழுதப்பட்டாலும் சீதன ஆதனம், சீதனத்தைப் பெற்றுக் கொள்ளும் பெண்ணுக்கு மட்டுமே சொந்தமாகும். சீதன உறுதியில் மனைவியின் பெயருடன் கணவரின் பெயர் சேர்த்து எழுதப்பட்டாலும், அதனால் கணவனுக்கு சீதன ஆதனத்தில் எதுவித பங்கும் கிடைத்து விடாது. இதைப்புரியாது இன்றும் பலர் மனைவியின் சீதன ஆதனத்தில் கணவனுக்கும் பங்கிருப்பதாக கற்பனை செய்து வருகின்றார்கள். அவ்வாறு செயற்பட்டும் வருகின்றார்கள்.

சீதன ஆதனம் மனைவிக்கு மட்டுமே உரித்தான தனிச் சொத்தாகும். கணவனுக்கு அதில் ஒரு குளி நிலம் கூட சொந்தமாகாது. சீதனத்தைப் பெற்றுக்கொண்ட பெண் அந்த ஆதனத்தைக் கைமாற்றஞ் செய்யாமல் இறப்பாளாயின் அவளது பிள்ளைகளுக்கு அது சம பங்காகச் சென்றடையும். பிள்ளைக ளின்றி இறப்பாளாயின், சீதனத்தை யார் கொடுத்தார்களோ அவர்களுக்கே அந்த ஆதனம் திரும்பிச் சென்றுவிடும். சீதனத்தைக் கொடுத்தவர்கள் இறந்திருப்பின் அவளது சகோதரங்களுக்கு சம பங்காக சென்று சேரும். எக்காரணங் கொண்டும் சீதன ஆதனம் கணவனுக்கோ கணவனைச் சார்ந்தவர் களுக்கோ (கணவன் வழி உறவினர்கள்) சேரமாட்டாது. எனினும் தேச வழமைச் சட்டத்தின் படி மனைவி தனது ஆதனத்தைக் கைமாற்றம் செய்வதற்காக எழுதும் எந்த உறுதிகளிலும் கணவனும் கையொப்பமிடல் வேண்டும். இந்த ஒரே ஒரு காரணத்துக்காக கணவனுக்கு சீதன ஆதனத்தில் எதுவித பங்கும் கிடைத்துவிடப் போவதில்லை.

சீதன வீடு

"சீதன வீடு" விடயமாக பலரும் பலவிதமாகக் கற்பனை கொண்டுள்ளார்கள். திருமண நாட் தொடக்கம் சீதன வீடு கணவனுக்கே சொந்தமானது என்றும், சீதன வீட்டில் கணவனுக்கு சரி அரைவாசிப் பங்கு உண்டு என்றும் வாதாடு வோர் இன்றுமுள்ளார்கள்.

இது மட்டுமல்ல சீதன வீட்டிலிருந்து மனைவியை அடித்துத் துரத்திவிட்டு கணவன் சீதன வீட்டில் ஏகபோக உரிமை கொண்டாடுவதும், தனது பெற்றோர்களையோ சகோதர சகோதரிகளையோ அதில் குடியிருத்தி ஆட்சி செய்வதும் கூட சில இடங்களில் காணப்படுகின்றன.

சீதன வீட்டை கணவன்மார் தம் எண்ணப்படி தங்கள் பிள்ளைகளுக்கோ அல்லது வெளியாட்களுக்கோ நன்கொடை செய்வதும், விற்பனை செய்வதும் கூட காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு சிலர் உறுதிகள் கூட எழுதியுள்ளார்கள். உறுதி ஒன்று எழுதப்பட்டுவிட்டது அல்லது உறுதி பதியப்பட்டுவிட்டது என்ற ஒரே காரணத்துக்காக இல்லாத உரிமை வந்துவிடப்போவ தில்லை.

"சீதன வீடு" என்றுமே மனைவிக்கு மட்டுமே சொந்தமானது. அதில் அவளுடைய கணவனுக்கு பங்கு எதுவும் கிடையாது. மனைவியுடன் ஒன்றாக வாழும்வரை கணவன் சீதன வீட்டில் வாழ அருகதையுடையவன். மனைவியை சீதன வீட்டிலிருந்து வெளியேற்றவும் கணவனுக்கு உரிமையில்லை. மனைவி உயிருடனிருக்கும்வரை சீதன வீட்டில் அவளது பிள்ளைகளுக்கு பங்கு எதுவும் கிடையாது. அவள் உறுதி எதுவும் எழுதாமல் இறப்பின் மட்டுமே தாயின் சீதன வீட்டில் பிள்ளைகளுக்கு பங்கு கிடைக்கும். பிள்ளைகளின்றி அவள் இறப்பின் , சீதன வீடு சீதனத்தைக் கொடுத்தவர்களுக்கே திரும்பச் சென்றுவிடும். எனவே "சீதன வீடு" திருமணப் பெண்ணின் தனியான சொத்தாகும்.

நன்கொடையும் , சீதனமும்

நன்கொடைக்கும் சீதனத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளையும் நன்கு தெரிந்து கொள்ளல் வேண்டும். இரண்டுமே விலை கொடுத்து வாங்காத சொத்தாக இருப்பதனால் இரண்டுமே ஒன்றுதான் என்ற அபிப்பிராயமும் பலரிடம் உண்டு. ஆனால் நன்கொடை வேறு, சீதனம் வேறு என்பதே உண்மையாகும்.

திருமணத்தை முன்னிட்டுக் கொடுக்கப்படுவதே சீதனம் ஆகும். எனினும் திருமணத்தன்றுதான் சீதனங் கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. திருமணத்துக்கு முன்னரோ , திருமணத்தன்றோ, திருமணத்தின் பின்னரோ கூட சீதனங் கொடுக்கப்படலாம்.

சீதனங் கொடுக்கப்பட்டால் கொடுக்கப்பட்டதுதான். பின்னர் எக்காரணம் கொண்டும் அதனைக் கைமீட்க முடியாது. நடைபெற்ற திருமணம் முறிவடைந்தாலும் கூட சீதனம் அதனைப் பெற்றுக் கொண்ட பெண்ணுக்கே உரியதாகும். சீதனத்தைப் பெற்றுக் கொண்ட பெண் அதனைக் கைமாற்றஞ் செய்யாமலும் வாரிசுகளின்றியும் இறந்தால் மட்டுமே சீதன ஆதனம் அதனைக் கொடுத்தவருக்கு திரும்ப வந்து சேரும். அசையா ஆதனத்தைச் சீதனமாகப் பெற்றுக்கொண்ட பெண் அதன் பின்னர் அவளது பெற்றோர்கள் இறப்பின் அவர்கள் சொத்தில் பங்கு கோரமுடியாது ஆனால் அசையா ஆதனத்தைச் சீதனமாகப் பெறாது நன்கொடையாகப் பெற்றுக்கொண்ட பெண், பெற்றோர்கள் இறந்த பின்னர் பெற்றோர்கள் சொத்தில் பங்கு பெற உரித்துடையவ ளாவாள். இதுவே நன்கொடைக்கும் சீதனத்துக்கும் இடையேயான முக்கிய வேறுபாடாகும்.

நன்கொடை சில கட்டுப்பாட்டுக்கு அமைவாகக் கொடுக் கப்பட்டிருப்பின் குறித்த கட்டுப்பாடு மீறப்படின் குறித்த நன்கொடையை நன்கொடை கொடுத்தவர் கை மீட்கலாம். மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடனும் நன்கொடை கைமீட்கப் படலாம். எனவே சீதனத்துக்குள்ள வலிமை நன்கொடைக்குக் கிடையாது.

கணவனுக்கு நன்கொடையாகக் கிடைத்த ஆதனத்தில் மனைவிக்கு உரிமை எதுவுமில்லை. அதே போல மனைவிக்கு நன்கொடையாக கிடைத்த ஆதனத்தில் கணவனுக்கு உரிமை எதுவுமில்லை. நன்கொடை பெற்றவர் வாரிசுகளின்றி இறப்பின் அச்சொத்து நன்கொடை கொடுத்தவருக்கே திரும்பச் சென்று விடும்.

திருமணத்துக்கு முன்னரே ஒரு பெண்ணுக்கு பெற்றோர் தங்கள் பெறுமதியான வீட்டைநன்கொடையாகக் கொடுத்து விடுகின்றார்கள். எனினும் திருமணப் பேச்சின்போது மணமகனின் பெற்றோர், குறித்த வீட்டைச் சீதனமாக எழுதித் தந்தால்தான் தாங்கள் திருமணத்துக்குச் சம்மதிப்போம் என்று பெண் வீட்டாருக்கு நிபந்தனை இடுகின்றார்கள். இவ்வாறான சிக்கல் களை நாங்கள் நடைமுறையில் சந்திக்கின்றோம்.

இதுவே சட்டத்தெளிவின்மையின் வெளிப்பாடாகும். சீதன உறுதி எழுதப்படும் போது மணமகனின் பெயர் மணமகளின் பெயருடன் சேர்த்து எழுதப்படுவதால் தங்கள் மகனுக்கும் சீதன ஆதனத்தில் பங்கு கிடைத்து விடுவதாக பெற்றோர்கள் தவறான அபிப்பிராயம் கொண்டே இவ்வாறு நிபந்தனையிடுகிறார்கள். ஆனால் மணமகளுக்கான நன்கொடை அல்லது சீதனத்தில் மணமகனுக்கு எதுவித பங்கும் கிடைக்கமாட்டாது. இரண்டுமே மணமகளுடைய தனிப்பட்ட சொத்தாகும். தேடிய தேட்டச் சொத்தில் மட்டுமே கணவனுக்கும் மனைவிக்கும் பங்கு கிடைக்கும். வேறு எந்தச் சொத்திலும் வாழ்க்கைத்துணை ஒருவர் மற்றவரின் சொத்தில் பங்கு கோரமுடியாது.

தெளிவாகச் சொல்வதானால் கணவனும் மனைவியும், தங்களுடைய தேடிய தேட்டச் சொத்தில் மட்டுமே பங்கு பெறும் உரிமையுடையவர்களாவர். முதுசொம் , சீதனம், நன்கொடை, உரிமை வழியான சொத்து என்பன அதனைப் பெற்றுக் கொண்டவர்க்கு மட்டுமே தனிப்பட்ட சொத்தாகும். இவற்றில் திருமணத் துணைக்கு பங்கு எதுவும் கிடைக்கமாட்டாது.

இனிசீதன உறுதிக்கும், நன்கொடை உறுதிக்கும் உள்ள ஒற்றுமையை ஆராய்வோம். இந்த இரு உறுதிகளும் எழுதப்படும் போது கொடுப்பவர்களுடன் பெறுபவர்களும் உறுதியில் கையொப்பம் இடல் வேண்டும். அதாவது ஒருவர் (ஒரு பகுதியினர்) அசையா ஆதனத்தை சீதனமாக அல்லது நன்கொடையாக கொடுக்கும்போது அதனைப் பெறுபவர் குறித்த உறுதியில் ஒப்பமிட்டு ஏற்கவேண்டும். இதுவே இவை இரண்டுக்குமிடையேயான ஒற்றுமையாகும்.

உறுதிகளுக்கு ஒப்பமிடல்.

இன்று நாட்டுக்கு வெளியே உள்ள பிள்ளைகளுக்கு கூட சீதன உறுதி எழுதப்பட வேண்டிய தேவையுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு சீதனத்தைப் பெறுபவர் கையெழுத் திடுவது என்ற கேள்வி எழுகின்றது. சீதனத்தையோ நன்கொடை யையோ பெற்றுக் கொள்பவர் குறித்த உறுதி எழுதப்படும் போது அவ்விடத்தில் இல்லாவிட்டால் அவர்கள் சார்பில், அவர்களின் வகைக்காக இன்னுமொருவர் கையெழுத்திடலாம். இவ்வாறு கையெழுத்திடுபவருக்கு குறித்த ஆதனத்தில் எதுவித உரித்தோ சோந்தையோ கிடைத்துவிட மாட்டாது. யார் பெயருக்கு சீதனம் / நன்கொடை எழுதப்படுகின்றதோ அவரே அச்சொத்துக்கு உரிமையாளராகச் சட்டம் கருதும்.

ஆனால் சீதனத்தை கொடுப்பவர் உறுதி எழுதப்படும் போது அவ்விடத்தில் இருந்து கையெழுத்திடுதல் முக்கியம். சீதன உறுதிக்கு மட்டுமல்லாது எந்த உறுதி எழுதுவதானாலும் ஆதனத்தைக் கையளிக்கும் ஆதனச் சொந்தக்காரர்கள் நேரில் பிரசன்னமாகி நொத்தாரிசு, சாட்சிகள் முன்னிலையில் கையொப் பமிடல் வேண்டும். இது ஒரு கட்டாய ஏற்பாடாகும். எனினும் ஆதனச் சொந்தக்காரர்கள் சார்பில் அவர்களின் அற்றோனித் தத்துவகாரர்கள் ஒப்பமிடலாம். இவ்வாறு ஒப்பமிடுபவரிடம் ஆதனச் சொந்தக்காரர் வழங்கிய வலிதான அற்றோனித் தத்துவம் இருத்தல் வேண்டும். அதைப்பற்றி உறுதியில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

ஆதனம் ஒன்றை ஒருவர் விலைக்கு வாங்கும்போது எழுதப்படுவதே அறுதி உறுதியாகும். இத்தகைய அறுதி உறுதியில், ஆதனத்தைப் பணம் கொடுத்து வாங்குபவரும் கையெழுத்திடவேண்டுமா என்பதில் சிலர் மயக்கமாக உள்ளார்கள். அறுதி உறுதியில் ஆதனத்தை விற்பவர்கள் மட்டுமே கையெழுத்திடல் வேண்டும். வாங்குபவர் கையெழுத்திட சட்டத்தில் ஏற்பாடு எதுவுமில்லை. அறுதி வாங்குபவர்கள் உரிய பணத்தைக் கொடுத்து நொத்தாரிசு மூலம் உறுதியை எழுதுவிப்பதே கடமையாகும். அவர்கள் சாட்சியாகவும் ஒப்பமிடக்கூடாது.

ஆதனத்தை அறுதி வாங்குபவர் வெளிநாட்டில் இருப்பினும்கூட அவர் பெயரில் அறுதி உறுதி எழுதப்படலாம். ஆதனத்தை அறுதி வாங்குபவர் உறுதி எழுதப்படும்போது கட்டாயமாக நேரில் பிரசன்னமாக வேண்டுமென்ற அவசிய மில்லை.

சீதன உறுதி, நன்கொடை உறுதி என்பவை போலவே குத்தகை உறுதியிலும் இரு தரப்பினரும் ஒப்பமிடல் வேண்டும். அறுதி உறுதி, நிபந்தனை அறுதி உறுதி, ஈட்டு உறுதி, ஒற்றி உறுதி போன்றவற்றுக்கு ஆதனச் சொந்தக்காரர் மட்டுமே ஒப்பமிடல் வேண்டும். மறு தரப்பினர் ஒப்பமிடத் தேவையில்லை.

எந்த உறுதிக்கும் குறைந்தது இரு சாட்சிகள் ஒப்பமிடல் வேண்டும். என்பதுடன் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் நொத்தாரிசு முன்னிலையில், உறுதியை நிறைவேற்றுபவர் ஒப்பமிட அதனைத் தொடர்ந்து சாட்சிகள் ஒப்பமிடுவது அவசியம்.

உறுதிப் படிவங்கள்

எந்த உறுதி எழுதும் போதும் மூன்று பிரதிகளில் (படிவங்களில்) எழுதப்படல் வேண்டும். முதல் பிரதி என்று சொல்லப்படும் "புறற்றக்கோல்" எழுதி முடித்த பின்னர் நொத்தாரிசின் பாதுகாப்பில் வைத்துப் பராமரிக்கப்படும். இது காணிப்பதிவு அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதில்லை. உண்மைப் பிரதி (ஒரிஜினல்) , இணைப்பிரதி (டுப்பிளிக்கேற்) ஆகிய இரண்டும் நொத்தாரிசால் காணிப்பதிவு அலுவலகத்துக்கு அனுப்பப்படும்.

ஆதனப் பெறுமதிக்குரிய முத்திரைகள் ஒட்டப்படும் இணைப்பிரதி காணிப்பதிவு அலுவலகத்தில் அந்த நொத்தாரிசின் பெயரில் தனிக்கோவையாக கோவை செய்து பாதுகாத்து வைக்கப்படும். ஒரு ரூபா முத்திரை ஒட்டப்படும் உண்மைப் பிரதி காணிப்பதிவு அலுவலகத்தில் உரிய புத்தகத்தில் அதற்கான பக்கத்தில் பதிவு செய்யப்பட்டு, இது சம்மந்தமான குறிப்புக்களை அந்த உறுதியில் குறிப்பிட்டு பதிவாளர் ஒப்பமிட்டு

அதன் பின்னர் குறித்த நொத்தாரிசிடம் அது மீள ஒப்படைக்கப்படும். இதுவே ஒரிஜினல் உறுதி எனப்படுவதோடு இதனை நொத்தாரிசிடமிருந்து, ஆதனத்தின் புதிய சொந்தக்காரன் பெற்று தனது பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்.

எனவே ஆதனந் தொடர்பில் ஒரு உறுதி எழுதப்படும்போது சம்பந்தப்பட்டவர்கள் மூன்று பிரதிகளில் கட்டாயமாக ஒப்பமிடல் வேண்டும். மூன்றுக்கு மேற்பட்ட பிரதிகளில் எக்காரணங் கொண்டும் ஒப்பமிடத் தேவையில்லை.

நொத்தாரிசு தான் கடமையாற்ற அனுமதிக்கப்பட்ட மாவட்டத்துக்கு வெளியேயுள்ள ஆதனந் தொடர்பான உறுதி எழுதும்போது மேலதிகமாக ஒரு பிரதி (ATTESTED COPY) எழுதுதல் வேண்டும். அதாவது வழமைபோல மூன்று பிரதிகளுக்குப் பதிலாக நாலு பிரதிகள் எழுதுதல் வேண்டும். எனினும் மூன்று பிரதிகளில் மட்டுமே சம்பந்தப்பட்டவர்கள் ஒப்பமிடுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

மரண சாதனம்.

மரணசாதனம் (LAST WILL) பற்றியும் மக்களிடையே பல்வேறு விதமான கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒருவர் உயிருடனிருக்கும் போது தான் விட்டிறக்கும் சொத்துக்கள் தனது இறப்பின் பின்னர் எவ்வாறு சென்றடைய வேண்டும் என்பதற்காக எழுதப்படுவதே மரணசாதனம் ஆகும். எனவே ஒருவர் இறந்த பின்னர் மட்டுமே மரணசாதனம் செயற்படுத்தப்படல் வேண்டும். மரணசாதனத்தை எழுதியவர் உயிருடன் இருக்கும் வரை அந்த மரணசாதனம் எதுவித பெறுமதியு மற்றதாகும்.

ஒருவர் ஒன்றன்பின் ஒன்றாக எத்தனை மரணசாதனமும் எழுதலாம். கடைசியாக எழுதப்படும் மரணசாதனம் மட்டுமே அவரது மரணத்தின் பின்னர் பெறுமதியுடைய தாக இருக்கும். ரூபா (5,00,000 /-) ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியுடைய ஆதனங்கள் தொடர்பான மரணசாதனம் கட்டாயமாக நீதிமன்றில் எண்பித்தல் வேண்டும். மரணசாதனம் ஒன்று முறையாக நிறைவேற்றப்பட்ட உறுதிக்கு இணையாகமாட்டாது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மரணசாதனம் பதிவு செய்யப்படுவதில்லை என்பதுடன் மரணசாதனத்தின் ஒரு பிரதி மரணசாதனத்தை முடிப்பவரிடமும் (அதாவது ஆதனச் சொந்தக் காரரிடமும்) மறு பிரதி நொத்தாரிசிடமும் இருக்கும். பொதுவில் மரண சாதனத்தை எழுதியவர் இறந்த பின்னரே அவரால் எழுதப்பட்ட மரணசாதனம் வெளிப்படுத்தப்படும்.

தனக்குச் சொந்தமான ஆதனங்கள் பற்றிய முழுமையான விபரங்கள், அதற்குரிய உறுதிகள் கைவசம் இல்லாத நிலையில் ஆதனச் சொந்தக்காரர் தன் மரணத்தின் பின்னர் தனது சொத்துக்கள் எவ்வாறு சென்றடைய வேண்டுமென விரும்புகின்றாரோ அதனை மரணசாதன மூலம் வெளிப்படுத்து கின்றார்.

மரணசாதனத்தைப் பொறுத்தவரையில் தேசவழமைக் குட்பட்ட திருமணமான ஒரு பெண் தானே தனிய ஒப்பமிடலாம். அதற்கு கணவனின் சம்மதமோ, ஒப்பமோ அவசியமில்லை. அத்துடன் எந்த ஒரு உறுதிக்கும் சாட்சிக் கையெழுத்திடவும் கணவனின் அனுமதி தேவையில்லை.

மரணசாதனம் இரு பிரதிகளில் மட்டுமே எழுதப்படுகிறது. காணிப்பதிவு அலுவலகத்துக்கு இது பதிவுக்காக கொடுக்கப்படுவ தில்லை.

முன்வாங்குரிமை.

முன்வாங்குரிமை என்பது தேசவழமைச் சட்டத்தில் மட்டுமே உள்ள சிறப்புரிமையாகும். முன்வாங்குரிமை என்றால் மற்றவர்களுக்கு முன்பதாக ஒரு ஆதனத்தை வாங்குவதற்கு ஒருவர் கொண்டிருக்கும் உரிமை என்று பொருளாகும். உண்மையான ஒரு வாங்குநர் பணங்கொடுத்து வாங்குவதற்கு தயாராயுள்ள அந்த விலையில் அந்தக் காணியைத் தமக்கு விற்கும்படி கேட்பதற்குள்ள உரிமையென்றும் வரைவிலக்கணம் கூறலாம்.

இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்திருக்கும் அசைவற்ற ஆதனத்தின் மீதுள்ளதும் தேசவழமையால் அங்கீகரிக்கப் படுவதுமான "முன் வாங்குரிமை" , சொரியல் ஆதனம் தொடர்பில் மட்டுமே பிரயோகிக்கப்படலாம்.

தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான தனியான ஆதனந்தொடர்பில் முன்வாங்குரிமையை ஒருவர் கோரமுடியாது.

பிரிவிடல் செய்யப்படாததும், ஒன்றுக்கு மேற்பட்டவர் களுக்குச் சொந்தமானதுமான சொரியல் ஆதனத்தில் மட்டுமே முன்வாங்குரிமை எழும். முன்வாங்குரிமை பின்வரும் இரு திறந்தவர்களுக்கு மட்டுமே உரித்தானதாகும்.

1. ஆதனத்தின் கூட்டுச் சொந்தக்காரர்
2. கூட்டுப் பின்னுரிமையாளர்

இவர்களைத் தவிர்ந்த வேறு எவருக்கும் முன்வாங்குரிமை கிடையாது என்று 1947ம் ஆண்டின் 59ம் இலக்கக் கட்டளைச் சட்டம் தெளிவுபடுத்தியுள்ளது.

நாகரத்தினம் எதிர் சண்முகம் (69NLR 389) என்ற வழக்கில் பங்காளர்கள் ஒவ்வொருவரதும் அறிவுடனும், சம்மதத்துடனும் சுமூகமான முறையில் பிரிக்கப்பட்டு தனித்தனித் துண்டுகள் ஆட்சி செய்யப்படும். ஒரு காணியின் பங்கு தொடர்பில் கூட்டுச் சொந்தக்காரர் என்ற அடிப்படையில் முன்வாங்குரிமைக்கான வழக்கொன்று தொடுக்கப்படமுடியாதென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் உறுதி எழுதலாமா?

நாங்கள் சட்டத்தரணிகளிடம் சென்று உறுதி எழுதினாலும், அவர்கள் "பிரசித்த நொத்தாரிசு" என்றே குறிப்பிட்டு ஒப்பமிடுகின்றார்களே இதற்கு என்ன காரணம் என்று சிலர் ஐயம் எழுப்புகின்றார்கள்.

"பிரசித்த நொத்தாரிசு" (NOTARY PUBLIC) என்ற தகமை உடையவர்கள் மட்டுமே உறுதிகள் எதனையும் எழுது முடியும். சட்டத்தரணி ஒருவர், சட்டத்தரணி என்ற கோதாவில் உறுதி எழுத முடியாது.

"சட்டத்தரணி" என்பது தனியான ஒரு பதவி. "பிரசித்த நொத்தாரிசு" என்பது வேறான ஒரு பதவி. ஆனால் பெரும் பாலான சட்டத்தரணிகள் எல்லோரும் "பிரசித்த நொத்தாரி சாகவும்" உள்ளார்கள். அதாவது ஒருவரே இரு பதவிகளையும் வைத்திருப்பார். வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர் சட்டத்தரணியாகவும், உறுதி எழுதும்போது பிரசித்த நொத்தாரி சாகவும் இரு வேறு கடமைகளை ஆற்றுகின்றார்கள்.

எனினும் சட்டத்தரணி ஒருவர் இலங்கையிலுள்ள எந்த நீதிமன்றத்திலும் தோன்றி வழக்காட முடியும். ஆனால் "பிரசித்த நொத்தாரிசு" குறித்த ஒரு மாவட்டத்தில் மட்டுமே கடமையாற்ற முடியும்.

❀ ---------- ❀ ---------- ❀

நான் சந்தித்த விசித்திர வழக்கு.

கணேசுக்கு எதிராக வசந்தி, தாபரிப்பு வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தாள்.

தனக்கு முன்னைய திருமணம் மூலம் நாலு பிள்ளைகள் என்றும், ஏழு வருடங்களுக்கு முன்னர் தனது கணவர் செல்வராசா தன்னை விவாகரத்துச் செய்துவிட்டார் என்றும், அதன் பின்னர் தான் கணேசுவைத் திருமணம் முடித்து கடந்த ஐந்து வருடங்களாக குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும், தற்போது கணேசு தன்னைக் கைவிட்டு விட்டதாகவும், எனவே கணேசிடமிருந்து மாதாமாதம் தாபரிப்புப் பணம் பெற்றுத் தருமாறும் கோரியே நீதவான் நீதிமன்றில் வசந்தி தனது சட்டத்தரணி மூலம் வழக்குத் தாக்கல் செய்திருந்தாள்.

கணேசு சார்பில் ஆஜரான நான், எனது கட்சிக்காரன், வசந்தியைத் திருமணமே செய்யவில்லை என்று மறுத்ததனால் இந்த வழக்கு விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதேவேளை கணேசு தன்னிடம் வாங்கிய கடனின் பேரால் தனக்கு ஒன்றேமுக்கால் இலட்சம் ரூபா பணம் தரவேண்டுமென்று கணேசுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் இன்னுமொரு வழக்கை வசந்தி தாக்கல் செய்திருந்தாள். (இரு நீதிமன்றங்களும் ஒன்றாகவே இயங்கின)

கௌரவமான உத்தியோகத்திலிருந்த கணேசு, தனக்கெதிரான இரு வழக்குகளையும் கைவிடுமாறும், அப்படிக் கைவிட்டால் வசந்திக்கு தான் ரூபா ஒரு இலட்சம் தருவதாகவும் சமரச முயற்சி ஒன்றை நீதிமன்றுக்கு வெளியே மேற்கொண்டார்.

பணத்தை அறவிடுவதற்காக தான் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்யவில்லை என்றும் , நீதிமன்றில் பலர் முன்னிலையில் கணேசைத் தலைகுனிய வைக்கவே வழக்கு வைத்ததாகவும் வசந்தி கூறி சமரசத்தை உதறிவிட்டாள்.

தாபரிப்பு வழக்கில் வசந்தி சார்பில் ஏற்பட்ட சட்டத்தரணி, தனது கட்சிக்காரியின் சாட்சியத்தை நெறிப்படுத்தினார். கணேசும் வசந்தியும் சேர்ந்தெடுத்த புகைப்படங்கள் சிலவற்றையும் ஆவணச் சான்றாகச் சமர்ப்பித்தார். இரு பலமான சாட்சிகளையும் அழைத்து வந்திருந்தார்.

குறுக்கு விசாரணையைத் தொடங்கிய நான், பின்வரும் கேள்விகளை வசந்தியிடம் கேட்டேன்.

கேள்வி : உமது முழுப்பெயர் என்ன?
பதில் : வசந்தி
கேள்வி : தலைப்பெயர் என்ன?
பதில் : தலைப்பெயர் தெரியாதபடியால்த்தான் கோட்டுக்கே வந்துள்ளேன்.
கேள்வி : உனது கணவரின் பெயர் என்ன?
பதில் : கணேசு

கேள்வி : இந்த வழக்கின் சத்தியக் கடதாசியில் உனது பெயர் எவ்வாறு எழுதப்பட்டு உள்ளது?

பதில் : கணேசு பெண் வசந்தி என்று

கேள்வி : எவ்வாறு சத்தியக் கூற்றில் ஒப்பமிட்டுள்ளீர்?

பதில் : "க.வசந்தி" என்று

கேள்வி : நீர் மாவட்ட நீதிமன்றில் இதே கணேசுவுக்கு எதிராக கடன் பணம் அறவிட குடியியல் வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளீரா?

பதில் : ஆம், எனக்கு இவர் ஒன்றே முக்கால் இலட்சம் ரூபாவும் வட்டியும் தரவேண்டும்.

கேள்வி : இது என்ன பணம்?

பதில் : என்னிடமிருந்து பெற்ற கடன்பணம். வட்டியுடன் தருவதாக "நோட்டும்" தந்துள்ளார்.

கேள்வி : இதுதானே அந்த வழக்கில் நீர் அணைத்த பிராது? (பிராதின் பிரதி காட்டப்படுகின்றது)

பதில் : ஆம்

கேள்வி : இந்தப் பிராதில் வழக்காளியாகிய உனது பெயர் எவ்வாறு எழுதப்பட்டு உள்ளது?

பதில் : செல்வராசா பெண் வசந்தி என்று

கேள்வி : பிராதுடன் அணைக்கப்பட்டுள்ள சத்தியக்கூற்றில் நீர் எவ்வாறு ஒப்பம் இட்டுள்ளீர்?

பதில் : "செ.வசந்தி" என்று

கேள்வி : எந்த வழக்கை முதலில் தாக்கல் செய்தீர்?

பதில் : முதலில் தாபரிப்பு வழக்கைத் தாக்கல் செய்தேன். அடுத்த கிழமை பண வழக்கை தாக்கல் செய்தேன்.

கேள்வி : இப்போது சொல் உண்மையில் உனது கணவன் யாரென்று?

பதில் : மௌனம்

கேள்வி : உனது கணவனை உனக்குத் தெரியாது?

பதில் : மௌனம்

கேள்வி : உனது முன்னைய கணவர் செல்வராசா ஏழு வருடங்களுக்கு முன்னர் உன்னை விவாகரத்துச் செய்து விட்டதாக தாபரிப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளீர்? எந்த நீதிமன்றில் விவாகரத்துப் பெற்றீர்?

பதில் : திருகோணமலை நீதிமன்றில்

கேள்வி : விவாகரத்துச் சான்றிதழ் உம்மிடம் உள்ளதா?
பதில் : ஆம் , திருகோணமலை வீட்டில் வைத்துவிட்டு வந்து விட்டேன்.

கனம் நீதிபதி அவர்களே! வசந்தி என்ற ஒரே பெண் ஒரே காலப்பகுதியில் எனது கட்சிக்காரன் கணேசுக்கு எதிராக இரு வேறு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார். ஒன்றிலே தன்னை கணேசு பெண் வசந்தி என்று குறிப்பிட்டு க.வசந்தி என்று ஒப்பமிட்டும், மற்றைய வழக்கில் செல்வராசா பெண் வசந்தி என்று குறிப்பிட்டு செ.வசந்தி என்று ஒப்பமிட்டும் நீதிமன்றத்தை ஏமாற்ற முயற்சிக்கின்றார். எனது கட்சிக்காரனை அவதூறுபடுத்தும் ஒரே நோக்கத்திலேயே இந்த வழக்குகளை ஜோடித்துள்ளார். எனவே தொடர்ந்து இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்காமல் தள்ளுபடி செய்ய வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வழக்கை இடைநிறுத்தி வைத்த மதிப்பிற்குரிய நீதிபதி அவர்கள் அன்று பிற்பகல் வழக்கை மீண்டும் கூப்பிடுவதாகத் தெரிவித்தார்.

பிற்பகல் வழக்கு மீண்டும் கூப்பிடப்படுகின்றது.

வழக்கின் மனுதார் வசந்தி, பொய்யான தகவல்களைத் தந்து மோசடியான எண்ணத்துடன் இரு வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளதாக நீதிமன்றம் முடிவு செய்து இரு வழக்குகளையும் தள்ளுபடி செய்து நீதிபதி கட்டளையிட்டார். தலைகுனிந்தது கணேசல்ல

(பெயர்கள் யாவும் கற்பனை)

இதுவும் சில தகவல்கள்

ஒருத்தரு ஒரு ரொம்ப கௌரவமான உத்தியோகத்துலே
இருந்து கிட்டு லஞ்சம் வாங்கினார்.
ஏன் சார் இவ்வளவு கௌரவமான உத்தியோகத்துலெ
இருந்துகிட்டு லஞ்சம் வாங்கரீங்களே இது தப்பு இல்லையா?ன்னு
கேட்டேன் அவருகிட்டே!
"இதுலே தப்பு இருக்கிறதா நான் நினைக்கலே சார்
ஏன்னா இந்த கௌரவமான உத்தியோகத்தையே நான்
லஞ்சம் குடுத்துத்தான் வாங்கியிருக்கேன்"! அப்படின்னார் அவர்.

☆☆☆ ---------- ☆☆☆ ---------- ☆☆☆ ---------- ☆☆☆

ஒரு ஆள் சொன்னான்:
"என் குதிரை வேகமா ஓடறதுக்கு என்ன வழி?ன்னு
கால்நடை மருத்துவர் கிட்டே கேட்டேன். அவர் ஒரு பாட்டில்
நிறைய மாத்திரைகளை குடுத்து தினம்ரெண்டு மாத்திரை வீதமா
கொடுக்கச் சொன்னார். முதல் நாள் இரண்டு மாத்திரையை
கொடுத்தேன், கொடுத்துவிட்டு அதுமேலேறி உட்காரப் போனேன்.
அவ்வளவுதான். அதுக்குள்ளே அது அம்பு மாதிரி பாய்ஞ்சு
ஓடிப்போச்சு'ன்னான்
"அடடா அப்புறம் நீங்க என்ன பண்ணினீங்க?" ன்னு
கேட்டேன்.

"மீதி மாத்திரை பூறாவையும் நான் முழுங்கிட்டு அதைத்
துரத்திப் புடிச்சேன்' அப்படின்னான் அவன்

✧✧✧ ---------- ✧✧✧ ---------- ✧✧✧ ---------- ✧✧✧

கடந்த காலம் சில பாடங்களைக் கற்றுத் தந்திருக்கின்றது
வருங் காலம் நம்பிக்கையைத் தருகின்றது – ஆனால்
நிகழ் காலத்தின் நல்லபொழுதை நழுவ விட்டால்
எதிர் கால நம்பிக்கை என்றும் நிறைவேறாது !

✪ ✪ ✪ ---------- ✪ ✪ ✪ ---------- ✪ ✪ ✪

தவறித் தவறுவது தவறல்ல – தவறிவிட்டுத்
தவறல்ல என்பதே தவறாகும்.

இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தன் சாகக் கிடந்தான். சுத்திவர சொந்த பந்தமெல்லாம் உட்கார்ந்திருக்கு. கடைசியா டாக்டர் வந்து கையைப்பிடிச்சிப் பார்க்கிறார். "ஆள் செத்திட்டான்"-ங்கறார் அவனை பாடையிலே வச்சி தூக்கிட்டுப் போறாங்க. பாதிவழியிலே பாடையிலே இருந்தவன் எழுந்திரிச்சி உட்கார்ந்துகிட்டு "நான் இன்னும் சாகலே உயிர் இருக்கு ன்னு மெதுவாக சொல்றான். தூக்கிக் கிட்டுப் போன நாலுபேர்லே ஒருத்தன் அவனைப் பார்த்து நீ செத்துப் போயிட்டதா டாக்டரே சொல்லிப்புட்டாரு. அவரை விட நீ என்ன விஷயம் தெரிஞ்சவனா? பேசாமே படுடா. அப்படின்னு சொல்லிபுட்டு எல்லோரும் இன்னும் அவசரமா நடக்க ஆரம்பிச்சாங்க.

சீதனச் சிரிப்பு :

ஒருவர் :- எனது மகள் ஒருத்திக்கு 20 வயது; அவளை நீ திருமணம் செய்யின் ரூபா இரண்டு லட்சம் சீதனமாகத் தருவேன். மற்ற மகளுக்கு 25 வயது; அவளை நீ திருமணம் செய்யின் ரூபா இரண்டரை இலட்சம் சீதனமாகத் தருவேன். இன்னொரு மகளுக்கு 30 வயது; அவளை நீ திருமணம் செய்யின் ரூபா மூன்று இலட்சம் தருவேன். உனது முடிவு என்ன?

வாலிபன் :- மாமா உங்களிடம் 50 வயதில் பெண் பிள்ளை இருக்கின்றாளா?

மனதை நெகிழ வைக்கும் கருத்தாழம் பொதிந்த மடல்.

தங்களது "அக்னி" நிகழ்ச்சியை கடந்த சில வாரமாகக் கேட்டு வருகிறேன். இந்த நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவிக்கும் அநேக பெண்கள் தங்கள் உள்ளக்கிடக்கைகளைக் கொட்டித் தீர்க்கின்றனர். பெண்கள் காலம் காலமாக ஆண்களால்

அடிமைப்படுத்தப் படுகிறார்கள் என்பது பலரது கருத்தாகவுள்ளது. மேலும் சீதனப் பிரச்சினைகளுக்கு ஆண்களே காரணகர்த்தாக்கள் என்றும் கூறப்பட்டிருந்தது.

சகோதரிகளுக்காக அவர்களின் சகோதரர்களும், தகப்பனுமாக மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்கிறார்களே? இச்சந்தர்ப்பத்தில் சீதனப் பிரச்சினையால் பாதிக்கப்படுவது ஆண்கள் இல்லையா?

திருமணப் பேச்சின் போதுசீதனத் தொகையை நிர்ணயித்துக் கொள்கிறார்களே சில மணமகன்களின் தாய்மார்கள்; அவர்கள் பெண்கள் இல்லையா?

பெண் அடிமைக்கு தனியே ஆண்கள் மட்டும் காரணம் என்பதை ஏற்க முடியாது. பெண்களும் , சமூகமும் பெண் அடிமைக்கு பெரும் பங்கு வகிக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

பிரச்சினை என்பது பெண்களுக்கு மட்டுமல்ல , ஆண்களுக்கும் தான். காதலித்து ஏமாற்றப்பட்ட பெண்களின் கதைகளைக் கதைக்கும்போது, காதலிகளால் கைவிடப்பட்ட ஆண்களைப் பற்றிக் கதைப்பாரில்லை. சில குடும்பங்களில் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனாலும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் எடுத்துக் காட்டான முறையில் அவதார புருசர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே?

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களின் நிலை என்ற அம்சத்திற்கு தாங்கள் வந்தது மிகவும் வரவேற்கத் தக்கது. இதில் உருப்படியான கருத்துக்களின் மூலம் நல்ல முடிவுகளை எடுத்து அவர்களுக்கு உதவ அனைவரும் முன்வர வேண்டும். எனக் கூறி இந்த மடலை இத்துடன் முடிக்கிறேன்.

ரவி பிரதீஷ் (பிரபு)
ஜேர்மனி

(மகன் பிரபு, ஜேர்மனியிலிருந்து இலண்டன் சர்வதேச ஒலிபரப்புச் சேவைக்குஅனுப்பி, பலத்த வரவேற்புப் பெற்ற கடிதத்தின் பிரதி)

கீதாசாரம்

எது நடந்ததோ ; அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ ; அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ ; அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய் ?

எதை நீ கொண்டு வந்தாய் ? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய் ; அது வீணாகுவதற்கு

எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தேஎடுக்கப்பட்டது.

எதைக் கொடுத்தாயோ , அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ , அது நாளை மற்றொருவருடைய தாகிறது.

மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியாகும்.

"இதுவே உலக நியதியும்,

எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.

ஸ்ரீ ஸாரதா மடம்
ஸ்ரீ ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமம்

அடக்கமான ஆளுமை

ஆரவாரமற்ற சாதனை

இளகிய மனம்

ஈந்து சிவந்த கரம்

உயர்ந்த எண்ணம்

Saba Raveeindiran

உளரறிந்த உத்தம சேவை

எதற்கும் அஞ்சாத துணிவு

ஏமாற்றாத நகைச்சுவை

ஐயந்தீர்க்கும் ஆலோசனைகள்

ஒழுக்கமான வாழ்க்கை

ஓயாத உழைப்பு

ஔவை வழி அழகு தமிழ் நடை

இவைகளின் மொத்த உருவம் இவரே

நண்பன்
Dr.ஸ்ரீதரன்
இலண்டன்